**கோடை வெயில்: தர்ப்பூசணி வியாபாரம் மும்முரம்**

First Published : 18 Apr 2011 08:36:05 AM IST

திருத்தணி, ஏப். 17: திருத்தணியில் கோடை வெயில் துவங்கியதைத் தொடர்ந்து தர்ப்பூசணி வியாபாரம் சூடுபிடித்துள்ளது.

திருத்தணி பகுதியில் கோடை வெயில் மக்களை வாட்டி எடுக்கத் துவங்கியுள்ளது. வெயிலில் இருந்து தங்களை காத்துக்கொள்ள பழச்சாறுகளை நாடிச் செல்கின்றனர். ஆண்டிற்கு ஒருமுறை கிடைக்கும் தர்ப்பூசணி பழங்களை அதிகளவில் வாங்கிச் சாப்பிடுகின்றனர்.

இதனால் தினமும் ரூ.500 முதல் ரூ.1,000 வரை தங்களுக்கு கூடுதல் வருமானம் கிடைப்பதாக திருத்தணியில் உள்ள தர்ப்பூசணி வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

தர்ப்பூசணி ஒரு டன் ரூ.5 ஆயிரம் கொடுத்து சென்னை, பெங்களூர் போன்ற ஊர்களில் கொள்முதல் செய்தும் திருத்தணி அருகே உள்ள ஒருசில கிராமங்களில் இருந்தும் விற்பனைக்காக திருத்தணிக்கு வியாபாரிகள் கொண்டு வருகின்றனர். எடைக்குத் தகுந்தாற்போல் ஒரு பழம் ரூ. 40 முதல் ரூ.50 வரை விற்கப்படுகிறது.

தற்போது வெயில் காலம் தொடங்கியுள்ள நிலையில் திருத்தணியில் முக்கிய சாலைகளில் ஆங்காங்கே தர்ப்பூசணி கடைகள் முளைக்கத் தொடங்கியுள்ளன. வெயில் காலத்தில் வழக்கமான வருமானத்துடன் இவர்களுக்கு தர்ப்பூசணியால் கூடுதல் வருமானம் கிடைக்கிறது.

இதுகுறித்து பழங்கள் விற்பனை செய்யும் வியாபாரி முனிகிருஷ்ணன் கூறியது: தற்போது கோடை தொடங்கியுள்ள நிலையில் சாத்துக்குடி, ஆப்பிள், தர்ப்பூசணி, சப்போட்டா உள்ளிட்ட 10-க்கும் மேற்பட்ட பழங்களின் விற்பனை அதிகரித்துள்ளது. ஏப்ரல், மே, ஜூன் ஆகிய இந்த மூன்று மாதங்களுக்கு பழங்கள் விற்பனை அமோகமாக இருக்கும். பிறகு அந்த அளவிற்கு வியாபாரம் இருக்காது. ÷சென்ற ஆண்டைக் காட்டிலும் இந்த ஆண்டு வெய்யிலின் தாக்கம் மார்ச் மாதம் முதல் வாரத்தில் துவங்கியுள்ள நிலையில் பழங்களின் விலையும் சற்று அதிகரித்து உள்ளது என்றார்.

திருவள்ளூர்: திருவள்ளூர் மற்றும் சுற்றுப்புறங்களில் வெயிலின் கொடுமை அதிகளவில் உள்ளதால் வெள்ளரிக்காய், மோர், ரஸ்னா போன்ற குளிர்பானங்கள் அதிகளவில் விற்பனையாகின்றன.

கடந்த பிப்ரவரி மாதம் முதலே திருவள்ளூர் மற்றும் சுற்றுப்புறங்களில் கடுமையான வெயில் மக்களை வாட்டி எடுத்து வருகிறது. இதனால் பகல் 11 மணி முதல் மாலை 4 மணி வரை நகரங்கள்

மற்றும் கிராமப் புறங்களில் மக்களின் நடமாட்டம் பெருமளவு குறைந்துள்ளது. அத்தியாவசிய தேவையைத் தவிர வேறு எதற்கும் மக்கள் வீடு மற்றும் அலுவலகங்களை விட்டு வெளியில் வருவதில்லை. இதனால் பொதுவான வியாபாரமும் பாதிக்கப்பட்டுள்ளது.

கடுமையான வெயில் கொளுத்துவதையொட்டி புதிது புதிதாக குளிர்பானக் கடைகள் முளைத்துள்ளன. அதில் மோர், ரஸ்னா போன்ற விலை மலிவான குளிர்பானங்கள் அதிகளவில் விற்பனையாகின்றது. மேலும் திருவள்ளூர் நகரின் முக்கிய நெடுஞ்சாலைகளின் ஓரத்தில் கிராமப்புறங்களில் வெள்ளரிக்காய் ஒரு கவர் ரூ.10-க்கு விற்கின்றனர். மேலும் பஜார் வீதியிலும் வெள்ளரிக்காய் அதிகளவில் விற்பனையாகின்றது.

சித்திரை மாதத்திலேயே இந்த அளவு வெயில் மக்களை வாட்டி எடுத்து வரும் வேளையில் அக்னி நட்சத்திரம், கத்திரி போன்ற காலங்களில் எப்படி இருக்க முடியும் என மக்கள் இப்பொழுதே கவலையடைத் துவங்கியுள்ளனர்.

**மீன் விலை கடும் உயர்வு**

First Published : 17 Apr 2011 11:15:18 AM IST

திருவாடானை, ஏப். 16: திருவாடானை தாலுகா, தொண்டி பகுதியில் மீன் வரத்து மிகவும் குறைந்து விட்டதால், மீன் விலை உயர்ந்துவிட்டது.

திருவாடானை தாலுகா, தொண்டி, சோழியக்குடி, நம்புதாளை, முள்ளிமுனை, காரங்காடு, எஸ். பட்டினம், திருப்பாலைக்குடி உள்ளிட்ட 50-க்கும் மேற்பட்ட கடற்கரை கிராமங்களில் வெள்ளிக்கிழமை இரவு முதல் 45 நாள்களுக்கு மீன்பிடிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், நாட்டுப்படகு மீனவர்கள் மட்டும் ஆழம் குறைந்த கடல் பகுதிகளில் மீன் பிடித்து வருகின்றனர்.

இதனால், மீன் வரத்து வெகுவாகக் குறைந்துவிட்டது.

இதன் விளைவாக கிலோ ரூ. 150-க்கு விற்ற விலை மீன் ரூ. 200 ஆக விற்றது. ரூ. 180-க்கு விற்ற முரல் மீன் ரூ. 250-க்கும், நண்டு கிலோ ரூ. 250-க்கும், கரைவலை இறால் கிலோ ரூ. 200-க்கும் விற்றது.

தொண்டி மீன் மார்க்கெட்டுக்கு வரும் மீன்கள், உடனுக்குடன் விற்று விடுவதால் தற்போது மீன்களுக்கு கடும் கிராக்கி நிலவுகிறது.

**சூறைக்காற்றில் வாழைகள் சேதம்: இழப்பீடு வழங்க கோரிக்கை**

First Published : 17 Apr 2011 09:47:04 AM IST

களக்காடு, ஏப். 16: களக்காடு பகுதியில் சூறைக்காற்றினால் சேதமடைந்த வாழைப்பயிருக்கு உரிய இழப்பீடு வழங்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து, நான்குனேரி சட்டப் பேரவை உறுப்பினர் எச். வசந்தகுமார், முதல்வர் மற்றும் மாவட்ட ஆட்சியருக்கு சனிக்கிழமை அனுப்பியுள்ள மனு:

களக்காடு அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் 2 தினங்களாக பெய்த மழை மற்றும் சூறைக் காற்றினால் சுமார் 15 ஆயிரம் வாழைகள் சேதமடைந்துள்ளன. இதனால் இப்பகுதி விவசாயிகள் பெரிதும் நஷ்டமடைந்துள்ளனர்.

பெரும்பாலான விவசாயிகள் கடன் வாங்கி வாழைப் பயிர் செய்துள்ளதால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய இழப்பீடு வழங்க மாவட்ட நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். வருவாய்த்துறையினர் சேதமடைந்த வாழைச்சேத விவரத்தைச் சேகரித்து பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடு கிடைக்க ஆணவ செய்ய வேண்டும் என்றார் அவர்.

**சேலம் மாம்பழ சீசன் தொடங்கியது**

First Published : 17 Apr 2011 10:33:33 AM IST

சேலம், ஏப். 16: உலகப் புகழ் பெற்ற சேலம் மாம்பழ சீசன் தொடங்கியுள்ளதால் மாம்பழப் பிரியர்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

÷முக்கனிகளில் முதல் கனியான மாம்பழ ஏற்றுமதியில் உலக அளவில் இந்தியா முக்கிய இடம் வகிக்கிறது. ஆண்டுக்கு சுமார் 1.10 கோடி டன்கள் மாம்பழம் இந்தியாவில் இருந்து உலகின் பல்வேறு நாடுகளுக்கு ஏற்றுமதியாகிறது.

÷இந்தியாவில் உத்தரபிரதேச மாநிலம்தான் அதிகளவில் மாங்கனிகளை உற்பத்தி செய்கிறது என்றாலும் தென்னிந்திய அளவில் ருசியும், வாசனையும் மிகுந்த மாம்பழங்கள் சேலம் மாவட்டத்தில் இருந்து மட்டுமே உற்பத்தியாகின்றன.

÷மாவில் 60-க்கும் மேற்பட்ட வகைகள் இருந்தபோதிலும் அதிகளவில் விளையும் தோத்தாபுரி எனப்படும் பெங்களூரா (கிளி மூக்கு) மாங்காய்களே அதிகமானவர்களால் அறியப்பட்டுள்ளது. இந்த வகை பழங்கள் தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் அதிகளவில் விளைகின்றன.

÷ஆனால் சேலம், சுற்றுப் பகுதிகளான கருமந்துறை, தும்பல், பேளூர், வாழப்பாடி, சன்னியாசிகுண்டு, மல்லூர், பனைமரத்துப்பட்டி, சங்ககிரி, நங்கவள்ளி, ஜலகண்டாபுரம், மேட்டூர், ஓமலூர், ஏற்காடு அடிவாரம், ஆடையூர் சுற்று வட்டார பகுதிகளில் விளையும் சேலம் பெங்களூரா, குண்டு (எ) அல்போன்ஸô, மல்கோவா, இமாம்பசந்த், நடுசாளை, செந்தூரா, குதாதத், மல்லிகா ஆகிய வகைப் பழங்கள் மட்டுமே பொதுமக்கள், குழந்தைகளால் விரும்பி உண்ணப்படுபவைகளாக உள்ளன.

÷எந்த பகுதி மாங்கனிக்கும் இல்லாத சிறப்பாக சுவையுடன் கூடிய மணமும் கொண்டிருப்பவை சேலம் மாங்கனிகள் ஆகும். வீட்டுக்குள் மாம்பழம் வைத்திருந்தால் அதன் வாசனை வீதி வரை நுழைந்துவிடும் என்று கூறப்படுவது வழக்கம். சேலத்தில் நிலவும் தட்பவெப்பநிலையும், மண் வளமுமே இதற்கு காரணம் என்று கருதப்படுகிறது. இந்த வகை மாம்பழங்கள் சேலத்தில் ஆண்டுக்கு சுமார் 5 ஆயிரம் டன்கள் விளைகின்றன.

ஜூலைக்கு பிறகும் வரத்து இருக்கலாம்... வழக்கத்துக்கு மாறாக இந்த ஆண்டு ஒரு மாதம் தாமதமாக சேலத்தில் ஏப்ரல் மாதம் மாம்பழ சீசன் தொடங்கியுள்ளது. இருப்பினும் ருசி மிகுந்த மாம்பழங்கள் சேலம் கடை வீதியில் உள்ள மொத்த விற்பனை நிலையங்கள், மண்டிகளுக்கு வரத் தொடங்கியுள்ளது. அதே சமயம் தருமபுரி, கிருஷ்ணகிரி, வெளி மாநில பழங்களும் வரத் தொடங்கியுள்ளது மாம்பழப் பிரியர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

÷அதே நேரம் விலையிலும் கடந்த ஆண்டைக் காட்டிலும் பெரிய அளவில் மாற்றம் ஏதும் இல்லை என்பதும் இரட்டிப்பு மகிழ்ச்சி அடையச் செய்துள்ளது. ஒரு மாதம் தாமதமாக சீசன் தொடங்கியுள்ளதால் ஜூலை மாதத்துக்கு பிறகும் மாம்பழ வரத்து இருப்பதற்கான வாய்ப்புகள் இருப்பதாக சேலம் மாம்பழ மொத்த வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

÷இது குறித்து சேலம் மாங்காய், பழ வியாபாரிகள் சங்கத் தலைவர் ஏ.ஜெயபால் கூறியது:

இங்கிலாந்து சென்ற சேலத்து மாம்பழம்: வழக்கமாக மார்ச் மாதத்தில் மாம்பழ சீசன் தொடங்கும். இந்த ஆண்டு தாமதாகத் தொடங்கினாலும் மே மாதத்தில் வரத்து மிகவும் அதிகமாக இருக்கும் என்றும் இதனால் விலையிலும் மேலும் சரிவு ஏற்படலாம் என்றும் கருதப்படுகிறது.

÷சேலம் அருகேயுள்ள வரகம்பாடியில் விளையும் ருசி மிகுந்த மாம்பழங்கள் பிரிட்டிஷ் காலத்தில் இங்கிலாந்து அரண்மனைக்கு அனுப்பப்படுவது வழக்கமாக இருந்துள்ளது. மேலும் மகாராஷ்டிர மாநிலம் ரத்தினகிரியில் விளையும் மாம்பழம் குண்டு (எ) அல்போன்ஸô மாம்பழம்தான். ரத்தினகிரிக்கே மாங்கன்றுகள் சேலத்தில் இருந்துதான் கடந்த 60 ஆண்டுகளுக்கு முன்பு கொண்டுச் செல்லப்பட்டன.

÷பல்வேறு பெருமைகள் கொண்ட சேலம் மாம்பழங்களின் விளைச்சல் கடந்த ஆண்டைக் காட்டிலும் சுமார் 20 சதவீதம் வரை அதிகரித்துள்ளது. இதனால் இந்த ஆண்டு மாம்பழப் பிரியர்களுக்கு கொண்டாட்டமான ஆண்டாகவே இருக்கும் என்றார் அவர்.

**அதிக மகசூல் தரும் இரு ரக அரிசி**

First Published : 17 Apr 2011 01:43:41 AM IST

கட்டாக், ஏப்.16: அதிக மசூல் தரும் இரு ரக அரிசிவகைகளை மத்திய அரிசி ஆராய்ச்சி நிலையம் கண்டுபிடித்துள்ளது. விரைவில் அந்த இரு ரகங்களும் அறிமுகப்படுத்தப்படவுள்ளன.

இந்தத் தகவலை மத்திய அரிசி ஆராய்ச்சி நிலைய இக்குனர் டி.கே.ஆத்யா வெள்ளிக்கிழமை ஒரிசா மாநிலம் கட்டாக்கில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். இதுகுறித்து அவர் மேலும் கூறியது: இந்த ஆராய்ச்சி நிலையம் அமைக்கப்பட்ட 64 ஆண்டுகளில் இதுவரை 82 புதிய ரக அரிசி ரகங்களை கண்டுபிடித்து அறிமுகப்படுத்தியுள்ளது. இப்போது அதிக மகசூல் தரும் இரு புதிய ரக அரிசியை கண்டுபிடித்துள்ளோம். மத்திய குழுவின் ஒப்புதல் கிடைத்ததும் இந்த புதிய ரக அரிசி அறிமுகப்படுத்தப்படும்.

கடந்த இரு ஆண்டுகளில் 11 புதிய ரக அரிசியை அறிமுகப்படுத்தியுள்ளோம். அதில் 5 ரகங்கள் ஒரிசா மாநிலத்தில் பயிரிட ஏற்றதாகும். இந்த புதிய ரகங்களை நாட்டின் பல்வேறு பகுதிகளில் பயிரிடுவதற்காக மத்திய, மாநில குழுக்கள் வெளியிட்டுள்ளன. சிஆர் தான்-701, சிஆர் தான்-601, சிஆர் போராதான்-2, சிஆர் தான்-401 மற்றும் சிஆர் தான் 501 ஆகிய ஐந்து வகை அரிசி ரகங்கள் பயிரிடுவதற்காக மத்திய, மாநில குழுக்களால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

பிகார், குஜராத், அசாம், தமிழ்நாடு, மேற்குவங்கம் மற்றும் ஆந்திரம் ஆகிய மாநிலங்களில் இது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

ஒரிசா மாநில துணைக் குழு சிஆர் தான்-801, சிர் தான்-401, சிஆர் தான்-402, சிஆர் தான் 403 மற்றும் சிஆர் தான் 901 ஆகிய ரகங்களை அறிமுகப்படுத்தியுள்ளது.

இதுதவிர அதிக மகசூல் தரும் சிஆர் 2301-5 மற்றும் 2285-6-6-3-1 ஆகிய புதிய அரிசி ரகத்துக்கு கடந்த வாரம் ஹைதராபாத்தில் நடந்த அரிசி ஆராய்ச்சி நிலையத்தின் அகில இந்திய கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

புதிதாக அறிமுகப்படுத்தியுள்ள ஐந்து ரகங்களில் 2 ரகங்கள் ஒரிசா மாநிலத்திலுள்ள ஜகதீஷ்சிங்காபூர் மற்றும் கேந்திரபுரா ஆகிய கடற்கரை நகரங்களில் பயிரிட மிகவும் ஏற்றது என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர் என ஆத்யா மேலும் கூறினார். இந்த இரு ரங்களும் ஒரு ஹெக்டேர் நிலத்தில் பயிரிடப்பட்ட 150 முதல் 155 நாட்களில் 3.5 டன் முதல் 4 டன்வரை விளைச்சல் தரக்கூடியது என்றார் அவர்.

புதிய ரக அரிசியை கண்டுபிடிப்பதோடு, விவசாயிகள் பயன் அடையும் வகையில் விவசாய தொழில்நுட்பங்களையும் அறிமுகப்படுத்திவருகிறது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

தினமலர்

## உள்நாட்டில் உற்பத்தி அதிகரிப்பால் சமையல் எண்ணெய் இறக்குமதி, குறைந்து

ஏப்ரல் 18,2011,00:34



புதுடில்லி: நாட்டின் சமையல் எண்ணெய் இறக்குமதி, தொடர்ந்து ஐந்து மாதங்களாக குறைந்து வருகிறது. இதன் இறக்குமதி, சென்ற மார்ச் மாதத்தில் 33 சதவீதம் சரிவடைந்து, 4 லட்சத்து 12 ஆயிரத்து 88 டன்னாக உள்ளது. இது, கடந்த ஆண்டின் இதே மாதத்தில், 6 லட்சத்து 12 ஆயிரத்து 293 டன்னாக இருந்தது.

உள்நாட்டு தேவையை பூர்த்தி செய்யும் அளவிற்கு, சமையல் எண்ணெய் உற்பத்தி இல்லாததால், நம் நாடு, இந்தோனேஷியா, மற்றும் மலேசியா ஆகிய நாடுகளிலிருந்து பாமாயிலையும், அர்ஜென்டினா மற்றும் பிரேசில் ஆகிய நாடுகளிலிருந்து, சோயா மற்றும் சூரியகாந்தி எண்ணெய் வகைகளையும் இறக்குமதி செய்து கொள்கிறது.

'நடப்பு கரீப் மற்றும் ராபி

பருவத்தில், எண்ணெய் வித்துகள் உற்பத்தி அதிகரித்துள்ளது. மேலும், எண்ணெய் பிழிதிறன் நடவடிக்கைகளும் சிறப்பான அளவில் வளர்ச்சி வளர்ச்சி கண்டுள்ளது.

இதன் காரணமாக, உள்நாட்டு சந்தைகளில் எண்ணெய் வரத்து அதிகரித்துள்ளதுடன், புண்ணாக்கு ஏற்றுமதிக்கான தேவைப்பாடும் அதிகரித்துள்ளது. இதன் விளைவாக, நாட்டின் சமையல் எண்ணெய் இறக்குமதி குறிப்பிடத்தக்க அளவு குறைந்துள்ளது' என, எண்ணெய் உற்பத்தியாளர்கள் கூட்டமைப்பின் செயல்

இயக்குனர் பீ.வி. மேத்தா

தெரிவித்தார். நடப்பு 2010-11ம் எண்ணெய் பருவம் (நவம்பர் - அக்டோபர்) தொடங்கியதில் இருந்து, சென்ற மார்ச் மாதத்தில் தான் குறைந்த அளவு இறக்குமதி செய்யப்பட்டுள்ளது என, மேலும் அக்கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட, சுத்திகரிக்கப்படாத பாமாயில் இறக்குமதி சென்ற மார்ச் மாதத்தில், 3 லட்சத்து 11 ஆயிரத்து 816 டன் என்ற அளவிலிருந்து, 1 லட்சத்து 79 ஆயிரத்து 959 டன்னாக சரிவடைந்துள்ளது. அதேசமயம், சோயாபீன் எண்ணெய் இறக்குமதியும், 1 லட்சத்து 45 ஆயிரத்து 996 டன்னிலிருந்து, 81 ஆயிரத்து 131 டன்னாக குறைந்துள்ளது.

சுத்திகரிக்கப்பட்ட பாமாயிலின் இறக்குமதி, 95 ஆயிரத்து 227 டன் என்ற அளவிலிருந்து, 73 ஆயிரத்து 768 டன்னாக குறைந்துள்ளது. இருப்பினும், சென்ற மார்ச் மாதத்தில், சூரியகாந்தி எண்ணெய் இறக்குமதி, 52 ஆயிரத்து 744 டன்னிலிருந்து, 76 ஆயிரத்து 230 டன்னாக அதிகரித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. சென்ற மார்ச் மாதத்தில், சமையல் சாராத இதர எண்ணெய் வகைகளின் இறக்குமதி, 23 ஆயிரத்து 647 டன்னாக உயர்ந்துள்ளது. இது, இதற்கு முந்தைய மாதத்துடன் ஒப்பிடுகையில், 15 சதவீதம் (20 ஆயிரத்து 575 டன்) அதிகம்.

நடப்பு 2010-11ம் ஆண்டு எண்ணெய் பருவத்தில் (நவம்பர்-அக்டோபர்) முதல் ஐந்து மாதங்களில், நாட்டின் ஒட்டு மொத்த சமையல் எண்ணெய் இறக்குமதி, 30 லட்சத்து 24 ஆயிரத்து 496 டன்னாக உள்ளது.

இது, கடந்த ஆண்டின் இதே மாதங்களில், 35 லட்சத்து 85 ஆயிரத்து 280 டன்னாக அதிகரித்து காணப்பட்டது.

**தோட்டக்கலை பண்ணையில் செடிகள் விற்பனைக்கு தயார்**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 18,2011,02:08 IST

ஆத்தூர்: ஆத்தூர் தோட்டக்கலை பழப்பண்ணையில் பழவகை, பூ மற்றும் அழகு செடிகள் விற்பனைக்கு உள்ளதாக, வேளாண்த்துறை அலுவலர்கள் தெரிவித்துள்ளனர். ஆத்தூர் தாலுகா கல்வராயன்மலையிலுள்ள கருமந்துறை, முல்லைவாடி அரசு தோட்டக்கலை பழப்பண்ணைகளில் பல்வேறு வகையான பழச் செடிகள், பூ உள்ளிட்ட அழகு செடிகளும் குறைந்த விலையில் விற்பனை செய்யப்படுகிறது. இதுகுறித்து, ஆத்தூர் முல்லைவாடி தோட்டக்கலை பழப்பண்ணை

அலுவலர் கண்ணன் தெரிவித்துள்ளது: அரசு தோட்டக்கலை பழப்பண்ணையில் மா, சப்போட்டா, கொய்யா, நெல்லி போன்ற பழவகை செடிகளும், வேம்பு, புங்கன், அசோகா, கிலானிக் போன்ற மர வகை செடிகளும் விற்பனைக்கு உள்ளது. இச்செடிகளை அரசு நிர்ணயம் செய்துள்ள விலைக்கு தேவைப்படும் விவசாயிகள், பொதுமக்கள், பள்ளி மற்றும் கல்லூரிகள், தொண்டு நிறுவன அமைப்புகளும் நேரடியாக வந்து வாங்கி கொள்ளலாம்.இவ்வாறு தெரிவித்துள்ளார்.

**பருத்தியில் காய்ப்புழுக்களை கட்டுப்படுத்த அறிவுரை**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 18,2011,02:23 IST

நாமக்கல்: பருத்தியில் காய் புழு தாக்குதலை கட்டுப்படுத்த, ஒருங்கிணைந்த பாதுகாப்பு முறைகளை கையாள வேண்டும்' என, நாமக்கல் உழவர் பயிற்சி நிலைய வேளாண் உதவி இயக்குனர் நடராஜன் தெரிவித்துள்ளார்.
அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: பருத்தி பயிரை சாறு உறிஞ்சும் பூச்சிகள் தாக்கினாலும், அதிக அளவு மகசூல் இழப்பு ஏற்படுவதில்லை. ஆனால், காய்ப்புழுக்களின் தாக்குதலால் அதிகளவில் மகசூல் இழப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளது.புள்ளி காய்ப்புழு தாக்குதல் பருத்தி இளம் பயிராக உள்ள போதே ஆரம்பித்து விடுகிறது. புழுக்கள் இளம் செடியின் குருத்தை துளைத்து உட்புகுந்து திசுக்களை உண்பதால் நுனிப்பகுதி காய்ந்து விடுகிறது. அதனால், பக்க கிளைகள் அதிகம் உருவாகிறது. இது ஒரு வகையில் சாதகமான அம்சம் என்றாலும், இப்புழுக்கள் பூ மொட்டுகள் இளம் காய்களை தாக்குவதால், பூக்களும் இளம் காய்களும் உதிர்ந்து விடுகின்றன. முற்றிய காய்கள் தாக்கப்பட்டாலும் உதிர்வதில்லை.

அமெரிக்கன் காய்ப்புழு பருத்தி பயிரில் அதிக சேதம் விளைவிக்கக்கூடியது. இப்புழுவின் தாக்குதல், சப்பை கட்டும் பருவம் தொடங்கி காய் முற்றும் பருவம் வரை நீடிக்கிறது. இப்புழுவானது பூ மொட்டு மற்றும் காய்களை சேதப்படுத்துகிறது. காயை துளைத்து காயின் உட்பகுதியை முழுவதும் சேதம் படுத்துவதால் அதிக அளவில் மகசூல் இழப்பு ஏற்படுகிறது. இளஞ்சிவப்பு காய்ப்புழுக்களால் தாக்கப்பட்ட பூக்கள் மலராது. காய்கள் உருவாகும் காலத்தில் இளம் புழுக்கள் காயை துளைத்து உள்ளிருந்து கொண்டு பஞ்சை உண்ணும். அதனால், காய் நன்கு முதிர்வதற்கு முன் வெடித்து, மகசூல் இழப்பு ஏற்படும்.

வெண்டை, புளிச்சக்கீரை, துத்தி மற்றும் கண்டங்கத்திரி செடிகளை அருகில் இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். பருத்தி பயிரைத் தாக்கும் பூச்சிகளுக்கு களைச்செடிகள் உணவாக பயன்படுவதால், அவற்றை நீக்கி வயல் வரப்புகளை எப்போதும் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். இனக்கவர்ச்சிப் பொறிகளை ஒரு ஏக்கருக்கு ஐந்து என்ற அளவில் வைத்து ஆண்

பூச்சிகளை கவர்ந்து அழித்து சேதத்தைக் குறைக்கலாம். பூச்சிகளின் முட்டைக் குவியல்கள் வளர்ந்த புழுக்கள் உதிர்ந்த சப்பைகள் பூக்கள் மற்றும் காய்களை பொறுக்கி அழிக்கலாம். பூச்சிகளின் தாக்குதல் பொருளாதார சேத நிலைக்கு மேல் இருந்தால், சப்பை கட்டும் பருவத்தில், எண்டோசல்பான் 35 ஈசி 800 மி.லி., ஏக்கருக்கு தெளித்து கட்டுப்படுத்தலாம். காய்பிடிக்கும் பருவம் மற்றும் முற்றும் பருவத்தில், பாசலோன் 35 ஈசி ஒரு லி., அல்லது கார்பரில் 50 சதம் நனையும் தூள் ஒரு கிலோ 400 லி., தண்ணீரில் கலந்து ஒரு ஏக்கருக்கு தெளித்து கட்டுப்படுத்தலாம்.
இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**நெல் கொள்முதல் மையம் அமைக்க வேண்டுகோள் : காவேரிப்பட்டணத்தில் துவங்க விவசாயிகள் எதிர்பார்ப்பு**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 18,2011,01:41 IST

கிருஷ்ணகிரி: "கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டணத்தில் நெல் கொள்முதல் மையம் அமைத்து இரண்டாம் போகம் அறுவடை செய்யும் நெல்லை அரசு வாங்க வேண்டும்' என விவசாயிகள் கோரிக்களை விடுத்துள்ளனர். கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சுமார் 50 ஆயிரம் ஏக்கரில் இரண்டாம் போக நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக கே.ஆர்.பி., அணை நீர்பாசன பகுதிகளான காவேரிப்பட்டணம்,பெரியமுத்தூர், சின்னமுத்தூர், திம்மாபுரம், மலையாண்டஅள்ளி, அவதானப்பட்டி, நாட்டான்கொட்டாய், வேலம்பட்டி, நெடுங்கல், பென்னேஸ்வரமடம் ஆகிய பகுதிகளில் அதிக அளவில் இரண்டாம் போக நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

தமிழகத்தில் மற்ற மாவட்டங்களில் குறிப்பாக டெல்டா மாவட்டங்களில் அரசு நெல் கொள்முதல் மையம் அமைத்து விவசாயிகளிடம் இருந்து நெல்லை கொள்முதல் செய்கிறது. இவ்வாறு கொள்முதல் செய்யும் நெல்லுக்கு கிலோ ஒன்றுக்கு 10 ரூபாயில் இருந்து 11 ரூபாய் அரசு வழங்குகிறது. கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டணம் சுற்று வட்டார பகுதிகளில் நெல் அதிகம் சாகுபடி செய்தும் இங்கு அரசு கொள் முதல் மையம் அமைக்காததால் விவசாயிகள் தனியாருக்கு நெல்லை விற்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். மாவட்ட விவசாயிகளிடம் இருந்து கொள் முதல் செய்யும் நெல்லுக்கு கிலோ ஒன்றுக்கு 5 ரூபாய் மட்டுமே தனியார் வியாபாரிகள் வழங்குகின்றனர். இதனால் விவசாயிகளுக்கு லாபம் கிடைக்காத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே காவேரிப்பட்டணத்தில் அரசு நெல் கொள் முதல் மையம் அமைத்து விவசாயிகளிடம் இருந்து நேரடியாக நெல்லை கொள்முதல் செய்ய வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தமிழக விவசாயிகள் சங்க மாநில பொது செயலாளர் ராமகவுண்டர் கூறியது: காவேரிப்பட்டணம் சுற்றுவட்டார பகுதியில் அதிக அளவு நெல் சாகுபடி செய்தும் காவேரிப்பட்டணத்தில் அரசு நெல் கொள்முதல் மையம் அமைக்கவில்லை. இதனால் விவசாயிகள் தனியார் இடத்தில் மட்டுமே நெல்லை விற்க்கும் நிலை உள்ளது. தனியார் வியாபாரிகள் சிண்டிகேட் அமைத்து விலையை நிர்ணயம் செய்து கொள்வதால் நெல் விவசாயிகளுக்கு குறைந்த விலையே கிடைக்கிறது. பல தனியார் வியாபாரிகள் பணம் கொடுக்காமல் நெல்லை எடுத்து சென்று பல மாதங்கள் கழித்து பணம் பட்டுவாடா செய்கின்றனர். வங்கிகளில் இருந்து கடன் பெற்று விவசாயம் செய்த விவசாயிகள் கடனை திருப்பி செலுத்த முடியாத நிலையில் உள்ளனர். கடன் பெற்று நெல் சாகுபடி செய்தும் பல இடங்களில் புகையான் நோய் தாக்குதலால் நெல் சாகுபடியும் பாதிக்கப்பட்டுள்ளது. காவேரிப்பட்டணம் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நல்ல இட வசதியும், குடோன் வசதியும், உலர்கள வசதியும் உள்ளதால் உடனடியாக அங்கு நெல் கொள்முதல் அமைக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

**கடும் வெயிலால் மா பிஞ்சுகள் உதிர்வு**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 18,2011,02:08 IST

பெத்தநாயக்கன்பாளையம்: ஆத்தூர், தலைவாசல், பெத்தநாயக்கன்பாளையம் பகுதிகளில் கடும் வெயில் காரணமாக மா பிஞ்சுகள் உதிர்வதால், மாம்பழம் உற்பத்தி பாதிக்கும் சூழல் ஏற்பட்டுள்ளது. சேலம் மாவட்டம் ஆத்தூர், தலைவாசல், பெத்தநாயக்கன்பாளையம், கல்வராயன்மலை, பச்சமலை, கெங்கவல்லி பகுதியில் பரவலாக "மா' பயிரிடப்படுகிறது. பெங்களூரா, ருமானி, பங்கனப்பள்ளி, அல்போன்ஸா, தேசஹாரி, தோடபூரி, மல்கோவா, பஞ்சவர்ணம், களப்பாடு, நீலம் உள்ளிட்ட மாம்பழங்கள் விளைவிக்கப்படுகிறது. கடந்தாண்டு, மா மரங்களில் பூ வைக்கும் பருவத்தில் போதிய மழையில்லை. பருவ நிலை மாறி நவம்பர், டிசம்பரில் மழை பெய்ததால், பூக்கள் குறைந்தளவில் பிடித்திருந்தது. அதனால், நடப்பாண்டில் மாம்பழம் உற்பத்தியும் வெகுவாக குறைந்துள்ளது. மா அறுவடை துவங்க உள்ள நிலையில், கடும் வெயில் தாக்கத்தினால் ஏராளமான மா பிஞ்சுகள் உதிர்ந்து வருகிறது. மா மரங்களில், பூக்கள் பெரும்பாலும் கருகியதால் குறைந்தளவில் காய் பிடித்துள்ளது. அதனால் ஆத்தூர், சேலம், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, பெரம்பலூர் போன்ற பகுதியிலுள்ள பழக்கடைகளில் குறைந்தளவில் மாம்பழங்கள் விற்பனைக்கு வந்துள்ளது. எதிர்பார்த்த அளவுக்கு உற்பத்தி இல்லாததால், மா பயிர் செய்துள்ள விவசாயிகள் பெரிதும் கவலையடைந்துள்ளனர்.

**சின்ன வெங்காயம் விலை ஏற்றம்**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 18,2011,00:20 IST

வெள்ளகோவில் : வெள்ளகோவில் வாரச்சந்தையில் வரத்து குறைந்ததையடுத்து, சின்ன வெங்காயம் விலை அதிகரித்துள்ளது. கடந்த வாரம் ரூ.15 ஆக இருந்த சின்ன வெங்காயம், நேற்று ரூ.40க்கு விற்கப்பட்டது. வாரச்சந்தையில் நேற்று, தக்காளி கிலோ ரூ.5; வெண்டை, பாகல், கத்தரி, பீர்க்கன்காய் ரூ.20; கோஸ் 10; உருளைக்கிழங்கு 20; காரட் 30; முள்ளங்கி 10; சின்ன வெங்காயம் ரூ.40; பெரிய வெங்காயம் 15; காலிபிளவர் 10; புடலை 10; அவரை 20; கொத்தவரை 10; அவரை 20 ரூபாய் என காய்கறி விலை நிலவரம்காணப்பட்டது.
அரவக்குறிச்சி, மூலனூர் பகுதிகளில் இருந்து முருங்கைக்காய் வரத்து அதிகரித்திருந்தது. விவசாயிகள் கொண்டு வந்த முருங்கையை தரம்பிரித்து, வியாபாரிகள் கொள்முதல் செய்தனர். மரமுருங்கை (20 காய் கொண்ட கட்டு) ரூ.20; செடி முருங்கை 30 ரூபாய்க்கு விற்கப்பட்டது.

வியாபாரிகள் கூறியதாவது: ஈரோடு, திருச்சி பகுதிகளில் இருந்து கொள்முதல் செய்து, வாரச்சந்தை விற்பனைக்கு காய்கறிகளை கொண்டு வருகிறோம். கடந்த வாரங்களில் காய்கறி வரத்து அதிகரித்திருந்தது. இதையடுத்து, காய்கறி விலை சீராக இருந்து வந்தது. தற்போது, வெளிமாநிலங்களில் இருந்து மார்க்கெட்டுக்கு சின்ன வெங்காயம் வரத்து மிகவும் குறைந்துள்ளது. வரத்து குறைந்துள்ள நிலையில், சின்ன வெங்காயத்துக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு, விலை அதிகரித்துள்ளது. வரத்து குறையும் பட்சத்தில், வரும் நாட்களில் சின்ன வெங்காயம் விலை மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது, என்றனர்.

**மாங்காய் விளைச்சல் அதிகரிப்பு**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 18,2011,00:19 IST

பொங்கலூர் : பொங்கலூர் பகுதியில், கந்தாம்பாளையம், கரட்டுப்பாளையம், அலகுமலை, பெரியாரியபட்டி, தொங்குட்டிபாளையம் உள்ளிட்ட இடங்களில் விவசாயிகள் மாசாகுபடியில் ஈடுபட்டுள்ளனர். மா பூக்கும் தருணத்தில் நல்ல தட்பவெப்ப நிலை காணப்பட்டதால், இந்தாண்டு விளைச்சல் அதிகரித்துள்ளது. சீசன் காலங்களில் விலை குறைய வாய்ப்பு உள்ளதால், பல விவசாயிகள் காயாக விற்பனை செய்வதில் ஆர்வம் காட்டுகின்றனர். பச்சை காய்களை ஊறுகாய் வியாபாரிகள் அதிகமாக கொள்முதல் செய்கின்றனர். இதனால், பச்சை காய்களுக்கு நல்ல விலை கிடைத்து வருகிறது. தற்போது மார்க்கெட்டில் ஒரு கிலோ 15 ரூபாய் வரை விலை போகிறது.

**தேங்காய் உரிப்புக்கு தொழிலாளர் பற்றாக்குறை : காசு பார்க்க முடியாமல் விவசாயிகள் தவிப்பு**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 18,2011,00:20 IST

பல்லடம் : பல்லடம், சுல்தான்பேட்டை வட்டாரங்களில் தேங்காய் உரிப்பு தொழிலாளர்கள் பற்றாக்குறையால் தோப்புகளில் தேங்காய்கள் மலைபோல் குவிந்து கிடக்கின்றன; உரிய நேரத்தில் தேங்காய்களை உரித்து காசு பார்க்க முடியாமல் விவசாயிகள் தவிக்கின்றனர். பல்லடம், சுல்தான்பேட்டை வட்டாரங்களில் தென்னை விவசாயம் பிர தான தொழிலாக உள்ளது. இப்பகுதிகளில் மட்டும் எட்டு லட்சத்துக்கும் மேற்பட்ட தென்னை மரங்கள் உள்ளன. காய்ப்புக்கு வந் துள்ள ஒவ்வொரு தென்னை மரத்திலும் 40 நாட்களுக்கு ஒரு முறை தேங்காய் பறிப்பு நடக்கிறது. ஒரு மரம் குறைந்தபட்சம் ஆண்டுக்கு 160 முதல் 200 தேங்காய் வரை கொடுக்கின்றன.

மரத்தில் இருந்து வெட்டப்படும் தேங்காயில் இருந்து மட்டையை உரித்து, வெளியே எடுக்கும் தொழிலாளர்களுக்கு 100 காய்களுக்கு 40 ரூபாய் கூலியாக கொடுக்கப்படுகிறது. பல்லடம், சுல்தான்பேட்டை வட்டாரங்களில் கடந்த இரண்டு ஆண்டுகளாக தேங்காய் உரிக்கும் தொழிலாளர்கள் பற்றாக்குறை அதிகமாக உள்ளது. இதற்கு காரணம், கடப்பாரை கம்பியில் தேங்காய் உரிப்பு செய்வதில் கவனக்குறைவு ஏற்பட்டால், கடப்பாரை நெஞ்சில் குத்தி உயி ருக்கு ஆபத்து விளைவித்து விடும். இதனால், புதிய ஆட்கள் இத்தொழிலுக்கு வர அச்சப்படுகின்றனர். சுல்தான்பேட்டை, பல்லடம் பகுதியில் 800க்கும் மேற்பட்ட தென்னந்தோப்பு களில் மட்டையுடன் கூடிய தேங்காய்கள் மலைபோல் குவிந்து கிடக்கின்றன. தொழிலாளர்கள் பற்றாக்குறையால் சரியான நேரத்தில் தேங்காய் களை உரித்து, திருப்பூர், கோவை, திண்டுக்கல், மதுரை, தூத்துக்குடி போன்ற மாவட்டங்களுக்கு விற்பனைக்கு அனுப்பி காசு பார்க்க முடியாமல் விவசாயிகள் தவிக்கின்றனர். சுல்தான்பேட்டை வட்டாரத்தில் உள்ள பெரிய தென்னை விவசாயிகள், உடுமலை, அமராவதி, திண்டுக்கல் பகுதியில் இருந்து தேங் காய் உரிப்புக்கு வழக்கத்தைவிட, காய் ஒன்றுக்கு 15 காசு கூடுதலாக கூலி கொடுத்து தொழிலாளர்களை அழைத்து வருகின்றனர்.

**ஏறுமுகத்தில் வெங்காய விலை**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 18,2011,00:19 IST

பொங்கலூர் : சின்ன வெங்காயம் விலை தொடர்ந்து உயர்ந்து வருவதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். பொங்கலூர் வட்டாரத்தில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் சின்ன வெங்காயம் சாகுபடி செய்யப்பட்டிருந்தது. அறுவடை சீசன் துவங்கியதும் ஒரு கிலோ 30 ரூபாய்க்கு விற்றது. சீசன் ஆரம்பித்ததும் விற்பனை செய்த விவசாயிகளுக்கு நல்ல லாபம் கிடைத்தது. பின், விலை

சரிந்து கிலோ 12 ரூபாயாகியது. வெயில் காலம் என்பதால், வெங்காயத்தை நீண்ட நாட்களுக்கு இருப்பு வைக்க முடியாது. எனவே, விவசாயிகள் மார்க்கெட் விலைக்கு விற்பனை செய்து விட்டனர். பல விவசாயிகள் நஷ்டத்தை சந்தித்தனர். சற்று வசதி படைத்த பெரிய விவசாயிகள் மட்டும் விலை உயரும் என்ற நம்பிக்கையில் இருப்பு வைத்தனர். அறுவடை சீசன் முடியும் தருவாயில் உள்ளதால், புதிய வெங்காயம் வரத்து குறைந்து வருகிறது. தற்போது வெங்காய விலை ஏறுமுகத்தில் உள்ளது.

தேவை அதிகரித்துள்ளதாலும், வெங்காய அறுவடை சீசன் முடியும் தருவாயில் உள்ளதாலும், கடந்த வாரம் கிலோ 17 ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்பட்ட சின்ன வெங்காயம், தற்போது 22 ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்படுகிறது. கடைகளில் கிலோ 25 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. தொடர்ந்து விலை உயர்ந்து வருவதால், வெங்காயம் இருப்பு வைத்திருந்த விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**தென்னையில் ஊடுபயிராக புல் வளர்க்க சுல்தான்பேட்டை விவசாயிகள் ஆர்வம்**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 18,2011,00:18 IST

சுல்தான்பேட்டை : கறவை மாடுகளுக்கு வழங்கப்படும் தீவனம் விலை உயர்வு காரணமாக, சுல்தான்பேட்டை வட்டாரத்தில் தென்னையில் ஊடுபயிராக தீவனப்புல் வளர்ப்பில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். சுல்தான்பேட்டை வட்டாரத்தில் ஜல்லிப்பட்டி, கம்மாளப்பட்டி, செஞ்சேரிபுத்தூர், சுல்தான்பேட்டை, தாளக்கரை, வாரப்பட்டி, குமாரபாளையம், செலக்கரிச்சல் உட்பட பல இடங்களில் கறவை மாடு வளர்ப்புத்தொழில் முக்கிய தொழிலாக உள்ளது. 5,000க்கும் மேற்பட்ட கறவை மாடுகள் உள்ளன. இப்பகுதியில் மேய்ச்சல் நிலம் பரப்பளவு தொடர்ந்து குறைந்து வருவதால், கறவை மாடுகளுக்கு போதிய அளவு பசுந்தீவனங்கள் கிடைப்பதில்லை. கறவை மாடு வளர்ப்பில் ஈடுபட்டுள்ள விவசாயிகள், மாடுகளுக்கு பசும்புல், மலம்புல் போன்ற தீவனங்களை, தாராபுரம், ஒட்டன்சத்திரம் பகுதி களில் இருந்து வாங்கி வரும் நிலையில் உள்ளனர். மேலும், கறவை மாடுகளுக்கு வழங்கும் தீவனங்கள் கிலோவுக்கு இரண்டு ரூபாய் அதிகரித்துள்ளது. பாளை தவிடு கிலோ ரூ.10, கடலை புண்ணாக்கு ரூ.32, சாதா உமிதவிடு ரூ.ஏழு என உள்ளதால், மாடுகளுக்கு தீவனம் வாங்குவது விவசாயிகளுக்கு கட்டுப்படியாகவில்லை. இதன்காரணமாக, சுல்தான்பேட்டை வட்டாரத்தில் உள்ள விவசாயிகள் பலர், தென்னந்தோப்புகளில் 60 நாளில் அறுவடைக்கு வரும் தீவனப்புல்களை ஊடுபயிராக சாகுபடி செய்து வருகின்றனர். இதன் மூலம் மாடுகளின் தீவனப்பற்றாக்குறையையும், தீவனங்களின் செலவினத்தையும் குறைக்க முடியும் என விவசாயிகள் தெரிவித்தனர்.

**முட்டைகோஸ் விவசாயத்தில் ஆர்வம்**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 18,2011,00:23 IST

கோத்தகிரி : கோத்தகிரி நெடுகுளா பகுதியில், முட்டைகோஸ் விவசாயம் அதிகரித்துள்ளது. நீலகிரி மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் பலர், தேயிலை விவசாயம் தவிர்த்து, காரட், முட்டைகோஸ், உருளைக்கிழங்கு, பீன்ஸ், முள்ளங்கி உட்பட மலை காய்கறிகள் உற்பத்தியில் ஆர்வம் காட்டுகின்றனர். கோத்தகிரி பகுதியில் நெடுகுளா, வ.உ.சி., நகர், மிளிதேன், சுள்ளிக்கூடு, கூக்கல்தொரை பகுதிகளில், இது அதிகரித்துள்ளது. ஒரு மாதத்தில், அறுவடைக்கு தயாராகும் முட்டைகோசுக்கு, நல்ல விலை கிடைக்கும் என, இப்பகுதி விவசாயிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

**இலவசமாக வழங்கும் உரத்தில் மணல் கலப்பு**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 18,2011,00:56 IST

நெல்லிக்குப்பம் : தமிழக அரசு விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கும் உரத்தில் மணல் கலந்து மோசடி செ#வதால் விவசாயிகள் அதிருப்தி அடைந்துள்ளனர். தமிழகத்தில் விவசாய வேலைக்கு ஆட்கள் பற்றாக்குறை உள்ளது. ஆட்கள் தேவை, நிலத்தடி நீர் தேவை, இடுபொருட்கள் அளவை குறைக்க கூடுதல் மகசூல் பெற சொட்டுநீர் பாசன முறையை பயன்படுத்த அரசு விவசாயிகளை ஊக்குவித்து வருகிறது. 65 சதவீத மானியம் வழங்குவதாக கூறுகின்றனர். மறைமுகமாக 65 சதவீதத்திற்கான தொகை அல்லது ஏக்கருக்கு 14 ஆயிரத்து 500 ரூபா# இதில் எது குறைவோ அதுவே வழங்கப்படுமென கூறியுள்ளனர். இதனால் நல்ல கம்பெனி மூலம் சொட்டு நீர் பாசனம் அமைக்க அதிக செலவு செ#ய வேண்டியுள்ளது. இம்முறையில் பல நன்மைகள் இருப்பதால் தி.மு.க., தேர்தல் அறிக்கையில் 95 சதவீதமும் அ.தி.மு.க.,வினர் 100 சதவீதமும் வழங்குவோம் என கூறியுள்ளனர். துல்லிய பண்ணையம் திட்டத்தின் கீழ் 20 விவசாயிகள் சேர்ந்து சங்கம் அமைத்து சொட்டு நீர் பாசனம் பயன்படுத்தி கரும்பு பயிரிட்டால் ஏக்கருக்கு 6,000 ரூபா# மதிப்புள்ள தண்ணீரில் கரையும் மூன்று வித காம்ப்ளக்ஸ் உரங்கள் வழங்குகின்றனர். இவை அதிகாரிகள் அலட்சியத்தால் ஓராண்டு கழித்தே விவசாயிகளுக்கு கிடைக்கிறது. மறுதாம்பு கரும்புக்கே பயன்படுத்த முடிகிறது. விவசாயிகளுக்கு இலவசமாக தானே செல்கிறது என நினைத்து உரக்கம்பெனிகள் அரசையும், விவசாயிகளையும் ஏமாற்றி வருகின்றனர். பாரம்பரியம் மிக்க கம்பெனிகளிடமிருந்து வாங்காமல் தங்களுக்கு பணம் கிடைக்கிற ஆசையால் தரமற்ற

கம்பெனிகளிடம் வாங்க அரசியல்வாதிகள் அதிகாரிகள் இணைந்து அனுமதித்துள்ளனர். இலவசமாக வழங்கும் உரங்கள் 25 கிலோ மூட்டையாக வருகிறது. ஒரு மூட்டையை தண்ணீரில் கரைத்தால் அதில் 5 கிலோ மணல் உள்ளது. ஒரு மூட்டைக்கு மணல் கலப்பதன் மூலம் மட்டுமே 500 ரூபா# கொள்ளையடிக்கின்றனர். உணவு பற்றாக்குறை ஏற்படாமல் தடுக்க விவசாயிகளுக்கு வழங்கும் உதவிகளில் தவறு நடப்பதை அரசு தடுத்தால் தான் விவசாயிகள் முழு பலனை அடைய முடியும்.

**மா பிஞ்சுகள் உதிரும் அவலம்: வியாபாரிகள் கலக்கம்**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 17,2011,01:47 IST

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில் வெயிலின் தாக்கம் அதிகரித்து வருவதால், மா பிஞ்சுகள் கருகி உதிர்ந்துவருகிறது. இதனால் மாந்தோப்புகளை குத்தகை எடுத்துள்ள வியபாரிகள் கலக்கம் அடைந்துள்ளனர். மாவட்டத்தில் 32 ஆயிரம் ஹெக்டேரில் மா சாகுபடி செய்யப்படுகிறது. குறிப்பாக காரிமங்கலம், பாலக்கோடு, பென்னாகரம் சுற்றுவட்டார பகுதியில் அதிக அளவில் மா சாகுபடி செய்யப்படுகிறது. இதன் மூலம் ஆண்டுக்கு 3 லட்சம் டன் மா அறுவடை செய்யப்பட்டு வெளி மாநிலங்கள், வெளி நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

மா மரங்களில் பூக்கும் பருவம் துவங்கும் நேரத்தில் பருவமழை ஓரளவு கைக்ககொடுத்த நிலையில், ஒட்டுமொத்தமாக மா மரங்களில் நடப்பாண்டு அதிக மகசூல் பெறமுடியும் என நினைத்திருந்த விவசாயிகள் தற்போது வறட்சி, வெயிலால் மா பிஞ்சுகள் கருகி உதிர்ந்து வருவதால் விவசாயிகள் கலக்கம் அடைந்துள்ளனர்.
முக்கியமாக மாவட்டத்தில் அதிகமாக பயிரிடப்பட்டுள்ள தோத்தாபுரி, செந்தூரா பங்கனப்பள்ளி, அல்போன்ஸா ஆகிய ரகங்கள் மா அறுவடை சீசன் துவங்கும் முன்னதாக விவசாயிகளுக்கு அதிக வருவாயை பெற்றத்தரும். ஆனால் நடப்பாண்டு கோடை சீசன் துவங்கும் முன்பே வெயிலின் தாக்கம் அதிகரித்துவருவதால், மா பிஞ்சுகள் சதை பருவத்தை எட்டமுடியாமல் வெதும்பி வருகிறது.

மா சதைப்பற்றும் சிறுத்து எடையளவு குறையத்துவங்கியுள்ளது. இதனால், விவசாயிகளிடமிருந்து குத்தகை பெற்ற வியாபாரிகள் அதிர்ச்சிக்குள்ளாகியுள்ளனர். மாவட்டத்தில் நிலவி வரும் கடும் வறட்சி காரணமாகவும், அதிக வெப்ப காற்று வீசி வரும் நிலையில் கருகி வருகிறது. மேலும் பிஞ்சுகள் தற்போது வெதும்பி கீழே விழுந்து வருகிறது.

ஒடசல்பட்டியை சேர்ந்த குத்தகைகாரர் சின்னதம்பி கூறியதாவது: நடப்பாண்டு பருவநிலை சாதகமாக இருந்ததால், மா மகசூல் அதிகரிக்கும் என்ற நிலையில் மா தோப்புகளை குத்தகை பிடித்தோம். குத்தகை தொகையை மா விவசாயிகளுக்கு வழங்கிவிட்டோம். ஒரு சில மரங்களில் பருவ மாற்றங்கள் ஏற்பட்டு பூத்த பூக்களும் வெப்பத்தின் தாக்கம் தாங்காமல் வெதும்பி கீழே விழ துவங்கியுள்ளது. இதனால், லட்கணக்கான ரூபாய் செலவழித்து குத்தகை பிடித்துள்ள தோப்புகளில் மாங்காய்கள் அறுவடை செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.
வேளாண் துறை இது குறித்து உரிய தொழில்நுட்ப நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பது ஒட்டுமொத்த விவசாயிகள் மற்றும் வியாபாரிகளின் எதிர்பார்ப்பாகவுள்ளது.

**மரவள்ளியில் மாவுபூச்சியை கட்டுப்படுத்த விவசாயிகளுக்கு ஒட்டுண்ணி செயல் விளக்கம்**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 17,2011,02:43 IST

கடலூர்:மரவள்ளியில் பப்பாளி மாவுப்பூச்சியின் தாக்கத்தை கட்டுபடுத்த ஒட்டுண்ணி வெளியிட்டு பயிற்சி அளிக்கப்பட்டது.இது குறித்து கடலூர் கரும்பு ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர் நசீர் அகமது விடுத்துள்ள செய்திக்குறிப்பு:மரவள்ளிப் பயிர் பண்ருட்டியை அடுத்த மேலிருப்பு கிராமத்தில் அதிகளவு பயிரிடப்பட்டுள்ளது. தற்போது நிலவும் கடும் உஷ்ணத்தினால் மரவள்ளியில் பப்பாளி மாவூப்பூச்சியின் தாக்கம் காணப்படுகிறது.

எனவே கடலூரில் உள்ள கரும்பு ஆராய்ச்சி நிலையம் மற்றும் பாலூர் காய்கறி ஆராய்ச்சி நிலையங்களின் மூலம், மேலிருப்பு கிராமத்து விவசாயிகளுக்கு மரவள்ளியில் பப்பாளி மாவுபூச்சி மேலாண்முறைகள் மற்றும் ஒட்டுண்ணிகள் வெளியீடு பயிற்சி அளிக்கப்பட்டது.பயிற்சியை பாலூர் காய்கறி ஆராய்ச்சி நிலையத்தின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் கலைமணி தலைமை தாங்கினார்.

முனைவர் நசீர் அகமது முன்னிலை வகித்தார். பூச்சியியல் துறை இணைப்பேராசிரியர் முனைவர் துரைசாமி மாவுப்பூச்சி குறித்து விவசாயிகளுக்கு விளக்கினார். பின்னர் ஒட்டுண்ணிகளை மரவள்ளியில் வெளியிட்டு செயல்விளக்கமளித்தார். இதில் மேலிருப்பு விவசாயிகள் 30 பேர் பங்கேற்றனர். துரைசாமி, அசோகன், கலைச்செல்வன் உள்ளிட்டோர் பங்கேற்றனர். ஜெயபிரபாவதி நன்றி கூறினார்.

**உளுந்து மகசூல் பாதிப்பு விவசாயிகள் கவலை**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 17,2011,02:42 IST

காட்டுமன்னார்கோவில் :காட்டுமன்னார்கோவில் பகுதியில் ஏற்பட்ட வெள்ள பாதிப்பால் உளுந்து மகசூல் குறைந்துள்ளது.காட்டுமன்னார்கோவில் பகுதியில் கடந்த ஆண்டு ஏற்பட்ட வெள்ள பாதிப்பால் உளுந்து விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் வேதனை தெரிவித்துள்ளனர். கடந்த ஆண்டு டிசம்பர் மற்றும் ஜனவரி மாதம் சிதம்பரம் காட்டுமன்னார்கோவில் பகுதியில் கடும் வெள்ள பாதிப்பு ஏற்பட்டது.

இதில் குறுவை சாகுபடி மற்றும் பல்வேறு கிராமங்கள் முற்றிலும் வெள்ளத்தில் மூழ்கி மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டதுடன் பயிர்கள் மூழ்கி பெரும் சேதம் ஏற்பட்டது.ஒரு வழியாக வெள்ளம் வடிந்து மிச்சம் மீதியை அறுவடை செய்து கிடைத்த நெல்லை விற்பனை செய்த நிலையில் எதிர்பார்த்த விலை கிடைக்காமல் பாதிக்கப்பட்டனர்.இதற்கிடையே அடுத்ததாக உளுந்து பயிர் விதைத்து சம்பாவிற்காக வாங்கிய கடனை திருப்பி விடலாம் என நம்பிக்கையோடு இருந்த விவிசாயிகளுக்கு இறுதியில் ஏமாற்றமே மிஞ்சியது.

வெள்ள காலத்தில் அனைத்து நிலங்களிலும் தண்ணீர் தேங்கி நின்றது மட்டுமில்லாமல் பூ பருவத்தில் தென்றல் வீசாததால் விதைக்கப்பட்ட உளுந்து பயிர் மறுத்து போய் விளைச்சல் இல்லாமல் போனது. இதனால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். ஒரு ஏக்கருக்கு 5 மூட்டை கிடைக்கும் என்ற நிலையில் தற்போது 2 மூட்டை தேறுவதே கடினமாக உள்ளது என விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

**வேளாண் பல்கலை வேண்டுகோள்**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 17,2011,00:42 IST

கோவை:கோவை வேளாண் பல்கலையின் பட்டமளிப்பு விழாவில் பங்கேற்க மாணவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டுள்ளன.இப்பல்லையின் 32வது பட்டமளிப்பு விழா, வரும் ஜூலை அல்லது ஆகஸ்டு மாதத்தில் நடத்தப்படவுள்ளது. இதையொட்டி, இப்பல்கலையால் தேர்வு முடிவுகள் அறிவிக்கப்பட்ட மாணவ மாணவியரிடமிருந்து பட்டம் பெறுவதற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விண்ணப்ப படிவம் மற்றும் இதர விவரங்களை, www.tnau.ac.in எனும் பல்கலையின் இணையதளத்தில் இருந்து வரும் 20 முதல் பெற்றுக் கொள்ளலாம்.

**கொப்பரை மார்க்கெட் நிலவரம்**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 17,2011,00:40 IST

பொள்ளாச்சி:காங்கேயம் மார்க்கெட்டில் கடந்த 9ம் தேதி நிலவரப்படி, கொப்பரை கிலோவுக்கு 66 முதல் 67.50 ரூபாய் வரை விலை கிடைத்தது. தேங்காய் எண்ணெய் 15 கிலோ டின்னுக்கு, 1,480 ரூபாயும், தேங்காய் பவுடர் கிலோவுக்கு 112 ரூபாயும் விலை நிர்ணயம் செய்யப்பட்டது.விவசாயிகள் சொந்த பொறுப்பில் பறித்து உரித்த தேங்காய் (மட்டை தவிர) டன்னுக்கு 18 ஆயிரம் ரூபாய் முதல் 18,500 ரூபாய் வரையிலும் விலை கிடைத்தது. பொள்ளாச்சி, உடுமலை பகுதியில் இருந்து சென்னை உள்ளிட்ட பகுதிகளுக்கும் அனுப்பும் தேங்காய் டன்னுக்கு 17,500 ரூபாய் விலை கிடைத்தது.

விவசாயிகள் பறித்து இருப்பு வைத்துள்ள தேங்காய் ஒன்றுக்கு 11.50 ரூபாயும், வியாபாரிகள் சொந்த பொறுப்பில் பறித்துக்கொள்வதற்கு ஒரு தேங்காய்க்கு 10.50 ரூபாயும் விலை கொடுக்கப்பட்டது.நேற்றைய நிலவரப்படி, கொப்பரை கிலோவுக்கு 63 ரூபாய் முதல் 64 ரூபாய் வரையிலும் விலை கிடைத்தது. தேங்காய் எண்ணெய் 15 கிலோ டின்னுக்கு 1,440 ரூபாயும், தேங்காய் பவுடர் கிலோவுக்கு 100 ரூபாயும் விலை நிர்ணயம் செய்யப்பட்டது. விவசாயிகள் பொறுப்பில் பறித்து உரித்த தேங்காய் (மட்டை தவிர) டன்னுக்கு 17,500 ரூபாய் முதல் 18 ஆயிரம் ரூபாய் வரையிலும் விலை கிடைத்தது. பொள்ளாச்சி, உடுமலை தாலுகாவில் இருந்து சென்னை உள்ளிட்ட மாவட்டங்களுக்கு உணவு தேவைக்காக அனுப்பும் தேங்காய் டன்னுக்கு 16,500 ரூபாய் முதல் 17 ஆயிரம் ரூபாய் வரையிலும் விலை கொடுக்கப்பட்டது.விவசாயிகள் பறித்து இருப்பு வைத்துள்ள தேங்காய் ஒன்றுக்கு 10.50 முதல் 11.00 ரூபாய் வரையிலும் விலை கொடுக்கப்பட்டது. வியாபாரிகள் சொந்த பொறுப்பில் பறித்து கொள்வதற்கு ஒரு தேங்காய்க்கு 9.50 ரூபாய் முதல் 10 ரூபாய் வரை விலை கிடைத்தது.

**கோடை வெயில் தாக்கம் எலுமிச்சை விலை உயர்வு**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 17,2011,21:37 IST

ஆண்டிபட்டி : கோடை வெயில் தாக்கம் அதிகரித்துள்ளதால் எலுமிச்சை விலை உயர்ந்துள்ளது. தேனி மாவட்டத்தில் சில வாரங்களாக கோடை வெயிலின் தாக்கம் அதிகரித்துள்ளது. வெப்பத்தில் இருந்து பாதுகாத்துக்கொள்ள குளிர்ச்சி தரும் பானங்கள், இளநீர்,பழங்களை அதிகம் பயன்படுத்தி வருகின்றனர் மக்கள். குறைந்த செலவில் தாகம் தணிக்கும் எலுமிச்சை இதில் அதிகம் பயன்படுத்தப்படுகிறது. இதனால் எழுமிச்சை விலை அதிகரித்து வருகிறது. மாவட்டத்தில் போடி,

பெரியகுளம் மலைப்பகுதிகளில் எலுமிச்சை விளைச்சல் அதிகம் உள்ளது. இப்பகுதியில் கிடைக்கும் எலுமிச்சை மாவட்டத்தின் பல பகுதிகளுக்கும், மதுரை, கேரளா போன்ற பகுதிகளுக்கும் விற்பனைக்கு அனுப்பப்படுகிறது. கடந்த மாதம் கிலோ 30 ரூபாய் ஆக இருந்த எலுமிச்சை விலை தற்போது 60 ஆக உயர்ந்துள்ளது. சீசன் துவங்கும் நேரத்தில் போதுமான மழை இல்லாததால் உற்பத்தி குறைந்துள்ளது. மதுரையில் சித்திரை திருவிழாவும், கிராமங்கள் தோறும் பொங்கல் விழாக்களும் நடந்து வருவதால் எலுமிச்சை தேவை அதிகரித்துள்ளது. சில்லரை விற்பனையில் ஒரு பழம் 2 முதல் 5 ரூபாய் வரை விற்கப்படுகிறது. தாமரைக்குளத்தை சேர்ந்த எலுமிச்சை வியாபாரி அழகர்சாமி கூறியதாவது:

எலுமிச்சைக்கான தேவை ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்து வருகிறது. தேவைக்கேற்ப உற்பத்தி இல்லை. பெரியகுளம், போடி பகுதிகளின் விளைவிக்கப்படும் எலுமிச்சை மாவட்ட தேவைக்கே சரியாக உள்ளது. வெளியூர் வியாரிகளுக்கு தேவையான பழங்களை விவசாயிகள் கொடுக்க முடியவில்லை என்றார்.

தினகரன்

**சின்ன வெங்காயம் கிலோ ரூ.38 ஆனது**

பதிவு செய்த நாள் 4/18/2011 12:32:32 AM



பொள்ளாச்சி : சின்ன வெங்காய வரத்து குறைந்ததால், சில்லரை விற்பனையில் அதன் விலை கிலோவுக்கு ரூ.38 வரை உயர்ந்துள்ளது. கோவை மாவட்டம் பொள்ளாச்சி காந்தி மார்க்கெட், திருவிக மார்க்கெட், தேர்நிலை மார்க்கெட் மற்றும் மொத்த காய்கறி மண்டி ஆகியவற்றுக்கு மைசூர், நாமக்கல் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து சின்ன வெங்காயம் விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. கடந்த 2 வாரங்களாக அப்பகுதியில் அறுவடை முடிந்து விட்டதால் சின்ன வெங்காயம் வரத்து படிப்படியாக குறைந்து இப்போது வருவதில்லை.

பொள்ளாச்சி சுற்று வட்டார பகுதிகளான கோமங்கலம், கோவிந்தனூர், புரவிபாளையம் உள்ளிட்ட பகுதிகளில் சாகுபடி செய்யப்படும் சின்ன வெங்காயம் மட்டுமே தற்போது விற்பனைக்கு வருகிறது. பற்றாக்குறை காரணமாக விலை கடுமையாக உயர்ந்துள்ளது. கடந்த 2 வாரங்களுக்கு முன் மொத்த விற்பனையில் ஒரு கிலோ சின்ன வெங்காயம் ரூ.20க்கு விற்றது.

தற்போது ரூ.30க்கு விற்கிறது. சில்லரை விலையில் ஒரு கிலோ ரூ.35 முதல் 38 வரை விற்கப்படுகிறது. உள்ளூர் வரத்தும் வரும் நாட்களில் குறைய வாய்ப்புள்ளதால் சின்னவெங்காயம் விலை மேலும் உயர வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது. அதேநேரத்தில் பெரிய வெங்காயம் விலை சீராக இருந்து வருகிறது. சில்லரை விலையில் பெரிய வெங்காயம் கிலோ ஒன்று ரூ.10க்கு விற்கப்படுகிறது.

**கடலூர் மாவட்டத்தில் முந்திரி விளைச்சல் பாதிப்பு விவசாயிகள் கவலை**

பதிவு செய்த நாள் 4/18/2011 12:31:39 AM



கடலூர் : கடலூர் மாவட்டத்தில் முந்திரி விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளதால் விவசாயிகள் களக்கமடைந்துள்ளனர். கடலூர் மாவட்டம், முந்திரி உற்பத்தி மற்றும் விற்பனையில் முக்கிய இடம் வகிக்கிறது. இங்கு சுமார் 50 ஆயிரம் ஏக்கரில் முந்திரி சாகுபடி நடைபெறுகிறது. இத்தொழிலை நம்பி சுமார் ஒரு லட்சம் தொழிலாளர்கள் உள்ளனர்.

ஏப்ரல் மாதம் தொடங்கி ஜுன் மாதம் வரை முந்திரி அறுவடை தீவிரமாக நடக்கும். ஆனால் இந்த ஆண்டு தாமதமான பருவ மழை காரணமாக பூமியின் ஈரப்பதம் ஜனவரி மாதம் கடந்தும் நீடித்ததால் பூ பூப்பது தாமதமாக தொடங்கியது. தற்போதைய நிலையில் முந்திரி பிஞ்சுகளாகவே உள்ளன.

இதனால் இந்தாண்டு முந்திரி அறுவடை தாமதமாவதுடன் உற்பத்தி பாதிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. தற்போது ஒரு மூட்டை ஸி 6 ஆயிரம் முதல் ஸி 7 ஆயிரம் வரை விற்கிறது. இது கடந்த ஆண்டு ஸி 3,500 ஆக இருந்தது. அதிக விலை இருந்தும் விளைச்சல் இல்லாததால் விவசாயிகள் கலக்கமடைந்துள்ளனர்.

## கடலை பருப்பு வரத்து குறைவால் கடலை எண்ணெய், வத்தல் விலை உயர்வு

பதிவு செய்த நாள் 4/17/2011 5:10:35 AM



விருதுநகர்: வரத்து குறைவால் கடலை பருப்பு மூட்டைக்கு ஸி400 விலை அதிகரித்துள்ளது. இதனால் கடலை எண்ணெய் விலை டின்னுக்கு ஸி100 அதிகரித்துள்ளது. வரத்து குறைவு மற்றும் ஆன்லைன் வர்த்தகத்தால் மிளகாய் வத்தல் குவின்டாலுக்கு ஸி500 வரை உயர்ந்துள்ளது. வரத்து இல்லாததால் வட மாநிலங்களில் கொள்முதல் செய்ய வேண்டிய நிலையில் கடலை பருப்பு (80 கிலோ) மூட்டை ஸி3,500ல் இருந்து ஸி3,900 என விலை உயர்ந்துள்ளது. இதனால் கடலை எண்ணெய் (15 கிலோ) டின் ஸி100 அதிகரித்து ஸி1,300 என விற்பனையானது. சில்லறை விற்பனையில் கிலோ ஸி105க்கு விற்பனை செய்யப்படுகிறது. ஆந்திரா குண்டூர் மார்க்கெட்டிற்கு தற்போது மிளகாய் வத்தல் வரத்து தினம் 60 ஆயிரம் மூட்டைகளாக குறைந்துள்ளது. விருதுநகர் மார்க்கெட்டிற்கு தினம் 1,500 மூட்டை வத்தல் வரத்து உள்ளது. வரத்து குறைவதாலும், ஆன்லைன் வர்த்தகத்தினாலும் வத்தல் குவின்டாலுக்கு ஸி500 அதிகரித்துள்ளது. சம்பா வத்தல் குவின்டால் ஸி7 ஆயிரத்தில் இருந்து ஸி8,800 என விற்பனையானது.

உளுந்து தஞ்சை (100 கிலோ) ஸி4,900, பர்மா பருவட்டு ஸி5 ஆயிரம், பொடி ஸி4,600, உருட்டு உளுந்தம் பருப்பு லயன் ஸி6,500, பர்மா பருவட்டு ஸி6,500, பொடி ஸி5,500, தொலி ஸி5,400, துவரை (100 கிலோ) ஸி4 ஆயிரம், துவரம் பருப்பு லயன் ஸி6 ஆயிரம், உடைசல் ஸி5,700, பாசிப்பயறு தஞ்சை (100 கிலோ) ஸி4,200, பாசிப்பருப்பு ஸி6,100 என விற்பனையானது. மல்லி (40 கிலோ) நாடு ஸி2,200 முதல் ஸி2,300, மல்லி லயன் ஸி2 ஆயிரம் முதல் ஸி2100 என விற்பனையானது. நல்லெண்ணெய்(15 கிலோ) ஸி2,180, பாமாயில் ஸி845, தேங்காய் எண்ணெய் ஸி1,408, கடலை புண்ணாக்கு(100 கிலோ) ஸி2,750, எள் புண்ணாக்கு(65 கிலோ) ஸி1,420 என விற்பனையானது.